பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
21 11 2024 **THURSDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உலக அளவில் விளையாட்டுத் துறையில் இந்தியா சிறந்து விளங்குவதற்கு ஏதுவாக ஒருங்கிணைந்த விளையாட்டுக் கொள்கை வகுக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. மீன்வள கணக்கெடுப்புப் பணியை மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

3. தமிழகத்தில் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே சொத்துவரி உயர்த்தப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தூய்மை இந்தியா இயக்கத்திற்காக மத்திய அரசு வழங்கிய நிதியை திமுக அரசு முறையாக பயன்படுத்தவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

>>>>><<<<<

ஒருங்கிணைந்த விளையாட்டுக் கொள்கை வகுக்கப்பட்டு வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் விளையாட்டுத் துறையினரிடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

உலக அளவில் விளையாட்டுத்துறையில் இந்தியா சிறந்து விளங்குவதற்கு ஏதுவாக இந்த கொள்கை வகுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

சர்வதேச பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக லாவோஸ் சென்றுள்ள அவர், அங்கு நடைபெறும் ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.

ஆக்கபூர்வமான பேச்சுக்களே நீண்டகால தீர்வுக்கு அடிப்படையாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

உலகளாவிய வளர்ச்சிக்கான உந்துசக்தியாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், இந்திய தொழில் கூட்டமைப்பு சம்மேளனத்தின் வருடாந்தர பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தொழில்துறை சீரான வளர்ச்சியை கண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

புதுமை கண்டுபிடிப்புகளுக்கு தொழில்துறையினர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

மீன்வளத்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

சர்வதேச மீன்வள தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மீன் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மீன்வள கணக்கெடுப்புப் பணியையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

உலக அளவில் சிறந்த தலைவராக பிரதமர் திரு. நரேந்திர மோடி திகழ்கிறார் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கயானாவின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

பிரஸார் பாரதியின் ஓ.டி.டி. சேவையில் அனைத்து தரப்பினரும் பயன் பெறுவதற்கான அம்சங்கள் உள்ளதாக அதன் தலைவர் திரு. நவ்னீத்குமார் செஹல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சேவை நேற்று அறிமுகப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

தூர்தர்ஷனில் ஒலிபரப்பான அனைத்து நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநிலங்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளை இந்த சேவை வழங்குவதாக அவர் கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது பேசிய பிரஸார் பாரதியின் தலைமை செயல் அதிகாரி திரு. கவுரவ் திவிவேதி, பத்து மொழிகளில் இந்த சேவை வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

விரைவில் அனைத்து மொழிகளிலும் சேவைகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே சொத்துவரி உயர்த்தப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 600 சதுரஅடிக்கும் குறைவாக உள்ள வீடுகளுக்கு சொத்து வரி இல்லை என்று குறிப்பிட்டார்.

மழையினால் சேதமடைந்த சாலைகள், பருவமழைக்குப் பின்னர் சரிசெய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நாளை மாலை சென்னையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<<

தூய்மை இந்தியா இயக்கத்திற்காக மத்திய அரசு வழங்கிய நிதியை திமுக அரசு முறையாக பயன்படுத்தவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்திற்காக தமிழகத்திற்கு 621 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை முறையாக பயன்படுத்த தவறிய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மீண்டும் மத்திய அரசிடம் நிதி கோருவது அவரின் இயலாமையை காட்டுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

சேலம் அரசு மருத்துவமனையில் இதயத்துடிப்பு அதிகமாக கொண்ட நோயாளிக்கு கதிரியக்க சிறப்பு சிகிச்சை மூலம் சரிசெய்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அறுவை சிகிச்சையின்றி இந்த சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாக அந்த மருத்துவமனையின் **Dean** டாக்டர் தேவி மீனாள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தேவி மீனாள் 29 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

பிரதமரின் சூரியசக்தி இல்லம் திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மதுரை மாவட்டத்தில் இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 53 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

நாகை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிக கனமழைக்கு

வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 44 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டத்தில் மகப்பேறு நிதியுதவி திட்டம் குறித்த விழிப்புணர்வு குறும்படங்கள் மற்றும் பாடல்களை ஆட்சியர் திருமதி. கிரேஸ் பச்சாவ் இன்று வெளியிட்டார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் பொதுமக்கள் குப்பைகளை போட வேண்டாம் என்று ஆணையர் திரு. மதுபாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக குற்றால அருவிகளில் இரண்டாவது நாளாக இன்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நெல்லை அரசு சித்த மருத்துவக் கல்லூரியின் வைரவிழா பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

சிவகங்கை மாவட்டத்தில், எடை குறைபாட்டுடன் பிறந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித் கூறியுள்ளார்.

>>>>><<<<<

திருச்சி விமான நிலையத்தில் இலங்கையிலிருந்து வந்த பயணியிடமிருந்து 18 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு, காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-18 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் **Rasmus Gemke** –ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-19, 21-15 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் **Rasmus - Frederik** இணையை வென்றது.

>>>>><<<<<

டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் **Hardik Pandiya** மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பேட்டிங் பிரிவில் திலக் வர்மா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>END<<<<<